R4795

## THE KINGDOM OF PEACE
## சமாதானத்தின் ராஜ்யம்

மீகா 4:1-8

"ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறு ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை."

நாகரீகமும் கிறிஸ்தவ மண்டலமும் காலத்தை வென்றிருக்கிறது என்றும் உலகமானது தேவனுடைய ராஜ்யமாகியிருக்கிறது என்றும் ஆயிரம் வருட யுகத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பது நமக்குரியது என்றும் அகில உலகமும் நீண்ட நாட்களாக பெருமையடித்துக் கொண்டிருக்கிறது. உதவி மாநாடுகள், சமாதான சபை மற்றும் சமாதான ஆணையம் ஆகியவை அழிவதற்காகவே ஒரு இமைப் பொழுதிலே கொழுந்து விட்டு எரிகிறது. "சமாதானம், சமாதானம்" என்கிற சத்தம் சமாதானத்தைக் கொண்டு வரவில்லை. பூமியின் தேசங்கள் எல்லாம் தேவனுடைய ராஜ்யம் என்று நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறோம். வேதாகமம் "இந்த உலகத்தின் ராஜ்யங்கள்" புறஜாதி ராஜ்யங்கள் என்று குறிப்பிடுகிறதாயும் மேலும் அது, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற, "உலகத்தின் அதிபதி" சாத்தான் என்றும் "ஆதிமுதற் கொண்டு அவன் பொய்யனும் சத்தியத்தில் நிலை நிற்காதவனுமாய்" இருக்கிறான் என்றும் கூறுகிறதை நாம் பார்க்க ஆரம்பித்திருக்கிறோம்.

இதையெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆண்டவர் நம்மை ஜெபிக்கச் சொன்ன தேவனுடைய ராஜ்யம், பரலோக ராஜ்யம் இன்னும் வரவில்லை. அது வரும் என்று கூறி தெய்வீக வாக்குத்தத்தம் உறுதியளித்து விளக்குகிறதாவது: பரிசுத்தமான சிலரை, தகுதியுள்ளவர்களை ஞானமுள்ள சிருஷ்டிகர் மனுக்குலத்திலிருந்து கூட்டிச் சேர்த்து, உலகம் ஆசீர்வதிக்கப்பட வேண்டிய மகிமையின் ராஜ்யத்தில் அவர்களது ராஜாவும் இரட்சகருமானவருடன் இணைக்கப்படுவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் எல்லாரும் இந்த வேதாகம சத்தியத்தில் நம்பிக்கையடைவில்லை. சிலர் "தேவனில் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்" என்று அறிவிக்கிற பல்வேறு ராஜ்யங்களின் நாணயத்தை குறிப்பிடுகிறார்கள். பல்வேறு சக்கரவர்த்திகளும் ராஜாக்களும் "தேவகிருபையினால்" ஆளுகை செய்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும் கூறுகிறார்கள். போப் கூட தன்னை மேசியா மற்றும் அவரது ராஜ்யத்திற்கு தனிப்பட்ட பிரதிநிதி என்றும் பூமியின் ராஜாக்களை நடத்துவதற்கும் ஆளுகை செய்யவும் தான் ஒருவரே அதிகாரம் உடையவர் என்றும் கூறிக்கொள்கிறார்.

அதிகம் பாரபட்சம் உள்ளவர்களை சமாதானப்படுத்த இந்த திசையில் இன்னும் அதிகம் தேவைப்படுகிறது. தற்கால நிலைமைக்கும், தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்து உலகத்தை இரட்சிக்கும் போது வியாபித்திருக்கிற நிலைமைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை குறிப்பிட்டு அதில் காட்ட வேண்டும். எல்லா வகையான பாவத்தையும் மற்றும் மரணத்தையும் கீழ்ப்படுத்தி, பூமியின் கோத்திரத்தில் விருப்பமும் கீழ்ப்படிதலும் உடையவர்களையும் மாபெரும் மரணத்தின் சிறைவீட்டிற்கு, பாதாளத்திற்கு, ஷியோலுக்கு, ஹேடசுக்கு சென்றிருக்கிறவர்களையும் விடுவித்து உயர்த்தவும் அவர் மகிமையின ராஜாவாக, மேசியாவாக ஆளுகை செய்ய மாபெரும் அதிகாரத்தை எடுத்துக்கொள்வார்.

### நமது சாதகமான தேசத்தில்

அமெரிக்கா தனது ராணுவம் மற்றும் போர்க்கப்பல்கள் மூலம் உலகத்தை வழிநடத்தாது. அதை பயமுறுத்த கிறிஸ்தவ தேசங்களிலிருந்து அச்சுறுத்தல் இல்லாத போது அப்படி செய்ய அவசியமில்லை. இந்த தேசம் ஆயிரக்கணக்கான மைல்கள் சமுத்திரத்தால் சுவர் போல சூழப்பட்டிருந்து போருக்காக அதிகமாக செலவு செய்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் கப்பற்படையின் மிக நவீன போர்க்கப்பல் டக்கோடா (Dakota) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இது ஒரு மாகாணத்தின் பெயர். அதன் விலை ஒரு கோடி டாலர்.

பெயரிடப்பட்ட அந்த மாகாணத்தின் வளர்ச்சிக்கு அதை பயன்படுத்தியிருக்கலாம் என்று மினியா போலிஸ் பத்திரிக்கை காண்பிக்கிறது. 25000 டாலரை விவசாய பள்ளி மற்றும் சோதனை பண்ணைக்கும் கொடுத்திருக்கலாம். 175,000டாலரை ஒவ்வொரு பள்ளிக்கும் நன்கொடை நிதிக்கு கொடுத்திருக்கலாம். அது 10500 டாலரை வருடா வருடம் ஒவ்வொரு பள்ளியின் பராமரிப்பிற்கு பயன்படுத்தியிருக்கலாம். இன்னும் 1,000,000 டாலரை மாநில விவசாய கல்லூரிக்கு கொடுத்திருக்கலாம்.

ஐரோப்பாவில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. உலகின் கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படுகின்றவைகளில் ஒருவருக்கொருவரை அழித்துக் கொள்வதற்கான ஆயத்தம், தவறு என்பதை நமக்கு காண்பிக்கவில்லையா? கிறிஸ்தவ தேசம் என்ற வார்த்தை அவர்களுக்கு தவறாக பயன்படுத்தப்படுகிறதா? இந்த விலையுயர்ந்த போர் ஆயத்தம் ஆபத்தினால் அல்ல பயத்தினாலே வழிநடத்தப்படுகிறது.

### மேசியாவின் ராஜ்யத்திற்காக ஜெபியுங்கள்

இந்த பாடத்தில் மனுக்குலத்தின் நம்பிக்கையாக மேசியாவின் ராஜ்யம் விளக்கப்படுகிறது. "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" கர்த்தருடைய ஆலயமாகிய ராஜ்யத்தை, அவரது சபையைக் குறிக்கிறது. அது உலகத்தின் ராஜ்யங்களுக்கு மேலாக ஸ்தாபிக்கப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். அதில் எல்லா ஜனங்களுக்கும் ஒரு ஈர்ப்பு இருக்கும். அது அவர்கள் ஏறுவதற்கு வழிநடத்தும், மனுக்குலத்தை ஈர்ப்பது ஆரோக்கியம் மற்றும் மறு சீரமைப்பின் ஆசீர்வாதங்களாகும். இதைஅனைத்து

ஜனங்களுக்கும் வழங்குவதற்காக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அவர்கள் அதன் தேவைகளுக்கு இசைவாக வருவார்கள். (அப்போஸ்தலர் 3:19-23)

அந்த ராஜ்யம் சீயோன் இயக்கம் மற்றும் பரிசுத்த பூமிக்கு நெருக்கமாக அடையாளம் காணப்படும். ராஜ்யமானது ஆவிக்குரியதாக, மனிதருக்கு காணப்படாததாக இருக்கும். ஆனால் பூமிக்குரிய முகவர்கள் யூதர்களாக இருப்பார்கள். "நீங்கள் ஆபிரகாமையும். ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்." (லூக்கா 13:28) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு தூண்டப்பட்டவர்கள் அங்கு அதிகமாக செல்வார்கள். விசுவாசம் உள்ள அனைவரும் நிதி உதவியுடனும் தயவுடனும் பிரதிநிதித்துவத்துடனும் செல்வார்கள். இஸ்ரேலிய நம்பிக்கைகளும் வாக்குத்தத்தங்களும் அவர்களை முதலில் பலமுடன் ஈர்க்கும். படிப்படியாக அருளப்படுகிற தேவனுடைய கிருபையும் மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களையும் அறிந்துகொண்டு கூறுவதாவது: "நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவரது பாதைகளில் நடப்போம். ஏனெனில் சீயோனிலிருந்து கர்த்தரின் வேதமும், எருசலேமிலிருந்து யேகோவாவின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3; மீகா4:2)

## தேவ சமாதானம் ஸ்தாபிக்கப்பட்டது

மேசியாவின் ராஜ்யத்தின் நியாயந்தீர்ப்பு, நீதியாயும் அநீதியை கண்டிக்கக்கூடிய தேசங்களுக்கு சாதகமாகவும் இருக்கும் என்று 3வது வசனம் கூறுகிறது. அதன் பலனால் போர்கள் இல்லாதிருக்கும். அழிக்கும் பட்டயங்கள் எல்லாம் கலப்பைகளாகவும் கத்தரிக்கும் கொக்கிகளாகவும் மாற்றப்படும். இனிமேல் மனித இரத்தம் பூமியில் சிந்தாது. இனத்தின் ஆசீர்வாதத்துக்காக பூமி உழப்படும். அச்சுறுத்தலும் பயமுறுத்தலும் இருக்காது. அந்த காலத்தின் ஆரம்பத்தில், நாம் ஒவ்வொருவரும் தேவனைப்பற்றிய சொந்த கருத்தை பின்பற்றுவார்களாக என்றும், இஸ்ரயேலர் மட்டும் யேகோவாவை பின்பற்றட்டும் என்றும் கர்த்தரின் பிள்ளைகள் கூறுவார்கள். அந்த காலத்தில் அவர் அவர்களை "மீதமாக இருக்கிறவர்களை" கூட்டிச் சேர்ப்பார். பிறகு கர்த்தர் சீயோனில் அவர்களை ஆளுகை செய்வார்.

ஆதியில் ஆதாமுக்கு ஆதிக்கம் கொடுக்கப்பட்டது. ஆனால் அது பாவத்தினால் இழக்கப்பட்டது. இயேசு, தமது மரண பரியந்தமாக கீழ்ப்படிதலினால் அவர் தேவனுடைய பிள்ளைகளுக்கு பலமான கோபுரமும்,கோட்டையும், பாதுகாப்பும் ஆனார். "முந்தின ஆளுகை அவரிடத்தில் வரும்." அவர் ஆயிரம் வருடம் ஆளுகை செய்து, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள அனைவரையும் ஆசீர்வதித்து உயர்த்துவார்.